# இந்தியத் துணைத் தூதரகம்
**யாழ்ப்பாணம்**

**ஊடக அறிக்கை**

## பரதநாட்டிய ஆற்றுகை நிகழ்வு

*மகா சிவராத்திரி நாளை முன்னிட்டு (பெப்ரவரி 21) யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ரூபா 250,000.00 நிதிப்பங்களிப்பில் நாட்டிய கலா கேந்திரா நிறுவனத்தினால் பரத நாட்டிய சிறப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு ஆற்றுகை செய்யப்பட்டது.*

*இந்த சிறப்பு நாட்டிய நிகழ்வானது யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தினரின் திருவாசக அரண்மனை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.*

*மேற்படி நிகழ்வில் நாட்டிய கலா கேந்திரா, நர்த்தன ஷேத்திரா, பொன்னாலை சந்திரபரதகலாலயம், நீர்வையூர் பொன்சக்தி கலாகேந்திரா மற்றும் வேலாயுதம் நர்த்தனாலயம் ஆகிய நடன நிறுவனங்களைச் சேர்ந்தவர்களின் பரத நடன ஆற்றுகைகள். இடம் பெற்றன. அன்றைய தினம் திருவாசக அரண்மனையில் தமது வழிபாடுகளை மேற்கொள்ள வந்த பெருந்திரளான அடியவர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் நிகழ்வைக் கண்டு களித்தனர்.*

*முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட யாழ். இந்தியத் துணைத் தூதுவர் அவர்கள் ரூபா 250,000.00 இற்கான காசோலையை நாட்டிய கலா கேந்திரா நிறுவனத்தின் இயக்குனர் முனைவர் கிருஷாந்தி இரவீந்திரா அவர்களிடம் கையளித்தார்.*

*நிகழ்வின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.*

***